# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2248/14 - 2021 ඔක්තෝබර් මස 4 වැනි සඳුදා - 2021.10.04

*2248/14 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**யாத்திரைகள் கட்டளைச் சட்டம்**

*அம்மடுவ சின்ன கதிர்காமம் எசல திருவிழா - 2021*

*அம்மடுவ சின்ன கதிர்காம எசல திருவிழா 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதியன்று சுப நேரத்தில் ஆரம்பமாகும்.*

- *ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி பூரண இரவு பிரித் போதனை.*
- *ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதியில் இருந்து 10 ஆந் திகதி வரை காலை தானம் மற்றும் மதிய தானம்.*
- *ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி இரவு சுப நேரத்தில் கொடியேற்றம் .*
- *ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதியில் இருந்து 10 ஆந் திகதி வரை இரவு சுப நேரத்தில் கொடியேற்றம் மற்றும் குபல் திருவிழா.*
- *ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதியில் இருந்து 15 ஆந் திகதி வரை தெவலை திருவிழா.*
- *ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதியில் இருந்து 20 ஆந் திகதி வரை மகா திருவிழா.*
- *ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வரலாற்று முக்கியத்துவம் மிக்க தியபோல தடாகத்தில் நீர்வெட்டுதல் உடன் எசல பெரஹெர நிறைவுபெறும்.*

*2. தேவாலயத்தில் வடக்குப் பக்கத்திலும் பின் பக்கத்திலும் முகலானந்த தெற்கு நோக்கி ரனவல அம்மடுவ வீதியின் கிழக்குப் பக்கம் கபு பூசாரி அவர்களின் இடமும், மேற்குப் பக்கமாக நிலயே அவர்களின் இடமும் எல்லையாக கொள்ளப்படுகிறது.*

*3. நோயாளர்கள், தொற்று நோயாளர்கள் மற்றும் இனிப்பு பண்ட வியாபாரிகள், மேலும் அன்னதானம் கொடுக்க விரும்பும் எவரும் இப்பகுதியில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.*

*4. மாவட்ட அதிகாரியின் அனுமதி இன்றி மாடுகளோ அல்லது வேறு எவ்வித மிருகங்களோ அனுமதிக்கப்பட மாட்டாது.*

*5. திருவிழா நடைபெறும் பூமிப்பகுதியில் வாகனம் செலுத்தவோ, நடமாடவோ அனுமதிக்கப்பட மாட்டாது.*

*6. இப்பகுதில் இருக்கும் வியாபார நிலையங்கள் ஒரு மீற்றருக்கு (4% குறையாத, குறையாமல்) குப்பைக் கூடைகள் வழங்கப்படும். குப்பைகளை கூடைகளில் போட்ட பின் மூடிவைக்கப்பட வேண்டும்.*


1A - G 35038 — 25 (2021/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

7. தேநீர் கோப்பை, கோப்பி கோப்பை, பால் பெக்கட் போன்றவைகளை குப்பை கூடைகளில் போடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். குப்பைகள் ஆங்காங்கே வீசப்பட்டது அதிகாரிகளின் கவனக்குறைவால் என நிரூபிக்கப்பட்டால் கட்டளையை மீறியதாகக் கருதப்படும்.

8. அதிகாரியின் 15, 16, 17, 18, 19 ஆம் இலக்க உத்தரவாதப்படி இப்பூமிப் பகுதியில் பேக்கரி, சாப்பாட்டு இடங்கள், வியாபார நிலையங்கள் என்பன தற்காலிகமாக மூடப்படும்.

9. இப்பகுதியில் தொற்று நோயாளர்கள் இருப்பின் சுகாதார நிலையங்களுக்கோ அல்லது பொலிஸ் வைத்தியருக்கோ உடனடியாக அதிகாரிக்கோ அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

10. இப்பகுதியில் தொற்று நோயாளர்களை சாப்பாட்டுக் கடைக்கு அனுமதிக்கவோ விற்பனை செய்யவோ அனுமதி இல்லை.

11. தொற்று நோயாளர்களை தங்கவைப்பதற்கு அனுமதி இல்லை. பொலிஸ் அல்லது சுகாதார அதிகாரிக்கோ அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

12. ஏழாவது நிபந்தனையின்படி பிச்சை எடுக்கவோ இலவசமாக உணவு வழங்கவோ அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர வேறு இடங்களில் பிச்சை எடுக்கவோ இலவசமாக உணவு வழங்கவோ இடமளிக்கப்பட மாட்டாது.

13. ஏழாவது அல்லது 10 ஆவது நிபந்தனையின்படி அவ்வவ் இடங்களுக்கான பெயரையோ பெயர்ப்பலகையையோ மாற்றுவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ யாருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

14. மாவட்ட அதிகாரி, சுகாதார உத்தியோகத்தர் ஆகியோருக்கு திருவிழா நடைபெறும் பூமிப் பிரதேசத்தில் குடிசை அமைப்பதற்கு அல்லது தூண் வைப்பதற்கு சட்ட பூர்வமாக இடமளிக்கப்பட்டுள்ளது.

**அனுராத ஜயகொடி,**
பிரதேச செயலாளர்,
வெலிகெபொல.

10-206

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.